# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,

ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 45/2024**

Deposition of Witness of PW13

| | | | |
|---|---|---|---|
| Name | : கிருஷ்ணராஜ் | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 18th நவம்பர் 2025.

எதிரி ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து 30.06.2024 ம் தேதி ஓய்வு பெற்று தற்போது கோவை மாவட்டத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 16.12.2018 தேதி மாலை 16.40 மணிக்கு அரச்சலூர் காவல் நிலைய பணியில் இருந்தபோது உதவி ஆய்வாளராக நிலைய அலுவலில் இருந்தபோது பாலசுப்பிரமணியம் என்பவர் பாதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட பணியாளர்கள் அளித்த புகார்களுடன் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று நிலைய குற்ற எண்.336/2018 சட்ட பிரிவுகள் 409, 420 இதச ன் கீழான வழக்கு பதிவு செய்து புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். **S.N. பாலசுப்பிரமணியன் கொடுத்த புகார் அ.சா.ஆ.10 ஆகவும், அர்ச்சுனன் கஸ்தூரிபா காந்தி செயலரிடம் கொடுத்த புகார் மனு அ.சா.ஆ.11 ஆகவும், துரைசாமி கஸ்தூரிபா காந்தி செயலரிடம் கொடுத்த புகார் மனு அ.சா.ஆ.12 ஆகவும், சரவணபாரதி கஸ்தூரிபா காந்தி செயலரிடம் கொடுத்த புகார் மனு அ.சா.ஆ.13 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப் படுகிறது.** வாதியின் புகாருடன் முதல் தகவல் அறிக்கையின் அசலையும் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.2 ஈரோடு அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**

S.N. பாலசுப்பிரமணியன் கொடுத்த புகாரில் எந்த தேதி புகார் கொடுக்கப் பட்டது என்ற தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.14 முதல்

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.11.18 18:42:23 +0530

தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 09.11.2018 தேதியிட்ட S.N. பாலசுப்பிரமணியன் கொடுத்ததாக சொல்லப்படும் புகார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். தேதியிடப்படாத S.N. பாலசுப்பிரமணியத்திடம் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் புகாரில் யார் யார் புகார் கொடுத்தார்கள் என்று விபரம் இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.14 முதல் தகவல் அறிக்கையில் காலம் 8ல் தாமதமாக புகார் கொடுத்தற்கான காரணம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் சரிவர பரிசீலனை செய்யாமல் இறந்துபோன S.N. பாலசுப்பிரமணியன் கொடுத்த புகாரின் பேரில் எதிரி மீது தவறாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.11.18 18:42:28 +0530